செ.வெ.எண்: 510/206 நாள்: 09.08.2016

**அனைவருக்கும் கல்வி இயக்கம் - கன்னியாகுமரி மாவட்டம்**
**மாற்றுத்திறன் படைத்த குழந்தைகளுக்கு சிறப்பு மருத்துவ முகாம்கள்**

**பத்திரிகை செய்தி**

கன்னியாகுமரி மாவட்டத்தில் 3032 மாற்றுத்திறனாளி குழந்தைகள் உள்ளனர். இந்த மாற்றுத் திறன் குழந்தைகள் அனைவருக்கும் கல்வி வழங்குவதற்கு தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மாற்றுத்திறன் படைத்த குழந்தைகள் பள்ளிக்கு வருவதில் ஏற்படும் சிரமங்களை தவிர்ப்பதிலிருந்து அவர்கள் கற்கும் திறன் அதிகரிக்க பல்வேறு ஆக்க பூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறைவான பாதிப்பினை உடைய 2477 மாற்றுத்திறன் படைத்த குழந்தைக்கு முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டு சிறப்பு பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் அதிகமான பாதிப்பினை உடைய மாற்றுத்திறன் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு போதிய வசதியில்லாததாலும், குடும்ப சூழ்நிலையாலும் பெற்றோர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதை கருத்திற்கொண்டு அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலம் பள்ளி ஆயத்த மையங்கள் (School Readiness Programmes) ஏற்படுத்தப்பட்டன. வட்டாரத்திற்கு ஒரு மையம் என 9 மையங்கள் செயல்பட்டு வருகிறது. இந்த 9 மையங்களில் பேச்சு குறைபாடு, இயக்க குறைபாடு, செயல்திறன் குறைபாடு, போன்ற 188 குறைபாடுள்ள மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு ஏற்படும் குறைபாடுகளுக்கான சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மிகவும் கடுமையாக கடுமையான பாதிப்பிற்குள்ளான குழந்தைகளுக்கு பயிற்சியும் சிகிட்சையும் தருவதற்கு அவர்களின் வீடுகளுக்கே சிறப்பாசிரியர்கள் மற்றும் இயன்முறை மருத்துவர்கள் சென்று பயிற்சியளித்து வருகின்றனர். வீட்டு மட்டத்தில் பயிற்சி பெறும் 367 குழந்தைகளின் உடல் நலம், மனநலம், அறிவு வளர்ச்சி போன்றவை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 18 வயதிற்குட்பட்ட மாற்றுத்திறன் படைத்த குழந்தைகளுக்கு முறையான மதிப்பீடு செய்து அவர்களுக்கு உதவி உபகரணங்கள் வழங்க தேர்வு செய்தல், அடையாள அட்டை வழங்குதல் மற்றும் அறுவை சிகிட்சைக்கு தேர்வு செய்யும் பொருட்டு 9 வட்டார வளமையங்களில் கீழ்க்கண்டவாறு மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

| **வ. எண்.** | **வட்டார வளமையத்தின் பெயர்** | **நாள்.** | **இடம்** |
|---|---|---|---|
| 1 | தக்கலை | 16.08.2016 | அரசு மேல்நிலைப் பள்ளி, தக்கலை |
| 2 | குருந்தன்கோடு | 17.08.2016 | அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, கடியப்பட்டணம் @ மணவாளக்குறிச்சி. |
| 3 | தோவாளை | 18.08.2016 | அரசு உயர்நிலைப் பள்ளி, இறச்சகுளம். |
| 4 | திருவட்டார் | 19.08.2016 | அரசு உயர்நிலைப் பள்ளி, திருவட்டார். |
| 5 | அகஸ்தீஸ்வரம் | 22.08.2016 | SLB அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி , நாகர்கோவில். |
| 6 | கிள்ளியூர் | 23.08.2016 | அரசு மேல்நிலைப் பள்ளி, கருங்கல் |
| 7 | இராஜாக்கமங்கலம் | 24.08.2016 | அரசு மேல்நிலைப் பள்ளி, இராஜாக்கமங்கலம். |
| 8 | மேல்புறம் | 26.08.2016 | அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்புறம். |
| 9 | முஞ்சிறை | 29.08.2016 | அரசு மேல்நிலைப் பள்ளி, முஞ்சிறை. |

இந்த மருத்துவ முகாம்கள் காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெறும். இம்முகாம்களை அனைவருக்கும் கல்வி இயக்கம், சுகாதாரத் துறை மற்றும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகமும் இணைந்து நடத்த உள்ளன.

இந்த மருத்துவ முகாமில் கலந்து கொண்டு பயன்பெற அனைத்து மாற்றுத்திறனாளி குழந்தைகளின் பெற்றோர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்(அகஇ),
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.